பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
09 05 2025 **FRIDAY** 6 30 **PM**

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாகிஸ்தானின் 400க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் வெற்றிகரமாக வீழ்த்தப்பட்டதாக இந்தியா கூறியுள்ளது.

2. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து கண்காணித்து வருகிறார்.

3. பாதுகாப்புப் படையின் செயல்பாடுகளை ஊடகங்கள் நேரலையில் ஒளிபரப்புவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

4. உணவு தானியங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. உலக கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி மற்றும் **Parth Salunkhe** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>><<<<<<**

பாகிஸ்தானின் 400க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் வெற்றிகரமாக வீழ்த்தப்பட்டதாக இந்தியா கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்தனர்.

இந்த தாக்குதலை நடத்தவில்லை என்று பாகிஸ்தான் கூறுவது நகைப்பிற்குரியது என்றும் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

பாகிஸ்தான், பொய்களை கட்டவிழ்த்து விடுவதை சர்வதேச நாடுகள் அறிந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ராணுவம் மற்றும் குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த 36 இடங்களை குறிவைத்து ட்ரோன்களை பாகிஸ்தான் செலுத்தியதாகவும், வான்வழியிலேயே அவை சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், விங் கமாண்டர் வியோமிகா சிங் தெரிவித்தார்.

சிவில் விமானத்தை பாகிஸ்தான் கேடயமாக பயன்படுத்தியதாக ஆதாரத்துடன் அவர் விளக்கினார்.

சிவில் விமான போக்குவரத்து தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு எதிரானது இது என்றும் அவர் தெரிவித்தார்.

**Bhatinda** ராணுவ நிலையை குறிவைத்து பாகிஸ்தான் செலுத்திய ஆளில்லா விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறினார்.

ஜம்மு காஷ்மீரை ஒட்டிய எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் படையினரால் அத்துமீறி நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உரிய பதிலடி கொடுக்கப்பட்டதாகவும், இதில் பாகிஸ்தான் ராணுவத்திற்கு பெரிய அளவு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் விங் கமாண்டர் வியோமிகா சிங் தெரிவித்தார்.

இதற்கிடையே, ஆப்பரேஷன் சிந்தூர் தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார்.

பாகிஸ்தான் படையினர் நேற்றிரவு நடத்திய வான்தாக்குதலை வெற்றிகரமாக நமது படையினர் முறியடித்துள்ள நிலையில், நேரடியாக இப்பணிகளை பிரதமர் கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, வான் பாதுகாப்பு கட்டமைப்பு வலுவாக உள்ளதை பாதுகாப்புப் படையின் நேற்றைய செயல்பாடுகள் உணர்த்தியுள்ளதாக ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி லெப்டினன்ட் கர்னல் தியாகராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – தியாகராஜன் 58 செகண்ட்ஸ்)

இந்நிலையில், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், முப்படைகளின் தளபதிகளுடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

அடுத்தகட்டமாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவும், எல்லைப் பகுதிகளில் நிலவும் சூழல் மற்றும் விமான நிலையங்களின் பாதுகாப்பு குறித்து உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அவசரகால அதிகாரங்களை பயன்படுத்தி போர்க்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சகம், மாநிலங்களின் தலைமைச்செயலாளர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள், பாதுகாப்புப் படைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நேரலை செய்வதை தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா, சுகாதார கட்டமைப்பு வசதிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

உணவு தானியங்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார்.

நெல் மற்றும் கோதுமை உற்பத்தி 4 முதல் 5 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

பயறு வகைகளும் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இணையதள வர்த்தகம் வாயிலாக வாக்கிடாக்கிகளை விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் கூறியுள்ளது.

இதன் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் முறையாக இல்லாததன் காரணமாக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

உரிய நெறிமுறைகளை பின்பற்றாமல் வாக்கிடாக்கிகளை இணையதளங்களில் விற்பனை செய்வது, நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அத்தியாவசிய பொருட்களை வர்த்தகம் செய்யும் நிறுவனங்கள் அனைத்தும் உரிய நெறிமுறைகளை பின்பற்றி செயல்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை உள்ளிட்ட ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டம், கூடலூரில் நறுமணப் பொருட்கள் கண்காட்சி இன்று தொடங்கியது.

சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வகையில் 130 கிலோ எடை வாசனைப் பொருட்களை கொண்டு அலங்கார வளைவு அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் மற்றும் மாங்காடு நகராட்சிப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், மாநில அமைச்சர் திரு. தாமோ. அன்பரசன் தலைமையில் இன்று குன்றத்தூரில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்யும் பணியினை ஆட்சியர் திருமதி. அருணா இன்று மேற்கொண்டார்.

**>>>>>><<<<<<**

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்யும் பணியினை ஆட்சியர் திரு. பிரசாந்த் இன்று தொடங்கி வைத்தார்.

**>>>>>><<<<<<**

திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமி சித்திரை திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

**>>>>>><<<<<<**

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி மற்றும் **Parth Salunkhe** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் தீபிகா குமாரி, சீனாவின் **Li Jiaman-**ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Parth Salunkhe,** கொரியாவின் **Kim Je Deok-**யை வென்றார்.

**>>>>>><<<<<<**

**Takhti** கோப்பைக்கான மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Jaskaran Singh** தங்கப்பதக்கம் வென்றார்.

ஈரானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>>><<<<<<**

**Taipei** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnathi Hooda** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-8, 19-21 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் **Hung Yi Ting**-ஐ வென்றார்.

**>>>>>><<<<<<**

ஆஸ்திரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் வைஷாலி ரமேஷ்பாபு முதலிடத்தில் உள்ளார்.

----------

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்று வரும் ஆசிய செஸ் சாம்பியன் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் இளம்பரிதி, **Nihal Sarin,** முரளி கார்த்திகேயன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

**>>>>>><<<<<<**

ஆசிய பளுதூக்கும் சாம்பியன் போட்டி சீனாவில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Seram Nirupama Devi** மற்றும் **Dilbag Singh** இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>><<<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டி ஒரு வாரத்திற்கு ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>>END<<<<<<**